செய்தி வெளியீடு எண்:110 நாள் : 16.03.2015

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி குடிநீர் பாதுகாப்பு வார முகாம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. S.P. வேலுமணி அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள்.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (16.03.2015) தமிழக அரசின் பாதுகாப்பான குடிநீர் பற்றிய ஒரு வார கால விழிப்புணர்வு முகாமை **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. S.P. வேலுமணி** அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

பயனுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டில், குடிநீர் பாதுகாப்பு வாரம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 19.2.2014 அன்று தலைமை செயலகத்தில், வெகு சிறப்பாக துவக்கி வைக்கப்பட்டது. அன்றைய தினத்தில்,தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களுக்கு குடிநீர் தரப்பரிசோதனைப் பெட்டிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முன்னின்று, அந்த மாபெரும் குடிநீர் பாதுகாப்பு வார முகாமை, இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தியது.

அது சமயம் 14,524 விலையில்லா நீர் தரப்பரிசோதனைப் பெட்டிகள் அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய அளவிலான பேரணிகள் நடத்தப்பட்டன. 13,500 ஆசிரியர்களுக்கு நீர் பரிசோதனைப் பெட்டி பயன்பாட்டு முறை பயிற்சி அளிக்கப்பட்டது. 26,500 பம்ப் ஆபரேட்டர்களுக்கு நீர் மாதிரி சேகரிப்பு முறை பயிற்சி அளிக்கப்பட்டது. 5,32,325 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டன. நீர் தர முழு விவரங்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டன.

தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் இதே போன்ற குடிநீர் பாதுகாப்பு வார முகாம் நடத்த ஆணையிட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் இன்று (16.03.2015) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. S.P. வேலுமணி அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால்

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com

வாரியம் தயாரித்த நீர் பரிசோதனை பெட்டிகளை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர்களுக்கு வழங்கி, தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தை துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து, 17.3.15 அன்று தமிழ்நாடு முழுவதும் 31 மாவட்ட விழிப்புணர்வு பேரணிகளும், 18.3.15 அன்று 385 தொகுதிவாரி விழிப்புணர்வு பேரணிகளும், 19.3.15 அன்று 12,524 பஞ்சாயத்து வாரியாக விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெறும்.

தமிழகத்தில் அனைத்து மக்களும் தாங்கள் பருகும் குடிநீரின் தரத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் அறியும் பொருட்டு, 20.3.2015 முதல் 22.3.2015 வரை அனைத்து நீராதாரங்களின் நீர் மாதிரிகளை சேகரித்து, பரிசோதனை செய்து, இணைய தளத்தில் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீர் மாதிரிகள் சேகரிப்பதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பம்பு ஆபரேட்டர்கள், சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நீர் மாதிரிகள் பரிசோதிப்பதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நீர் மாதிரிகள் சேகரிப்பது மற்றும் சோதனை செய்வதன் அவசியத்தை பொதுமக்கள் அறியும் வகையில் ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த விழிப்புணர்வு முகாம், நீரின் தரம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த பெரிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. கே. பணீந்தர ரெட்டி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர், திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு சி. விஜயராஜ்குமார் இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு பி. சந்திர மோகன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப. மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலாண்மை இயக்குநர்
த.கு.வ.வாரியம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com